கடும் சிரமத்தை ஏற்படுத்தும்

எந்தவிதக் கலந்தாய்வுமின்றி பணியிட மாற்றம் செய்வதா?

முதுநிலை மருத்துவர்கள் எதிர்ப்பு!

சென்னை, அக். 10 - கடந்த ஆண்டுகளைப் போலல்லாமல், தங்களுக்கு எந்தவித கலந்தாய்வும் இன்றி பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளதாகவும், இந்த ஏற்பாடு தங்களுக்கு சிரமத்தை ஏற்படுத்துவதாகவும் கூறி, மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநரால் (DME) பிறப்பிக்கப்பட்ட தற்காலிகப் பணியிட நியமன உத்தரவுகளை சேவை முதுநிலை மருத்துவர்கள் எதிர்த்துள்ளனர். இருப்பினும், மருத்துவர்கள் தங்களது சம்பளத்தை தாமதமின்றிப் பெறுவதை உறுதி செய்வதற்காகவே இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக மருத்துவக் கல்வி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

வழக்கமாக, முதுகலை பட்டப்படிப்பை முடித்த பிறகு கலந்தாய்வைத் தொடர்ந்து தங்களுக்கு நிரந்தரப் பணியிடங்கள் வழங்கப்படும் என சேவை முதுநிலை மருத்துவர்கள் தெரிவித்தனர். ஆனால் இந்த முறை, இன்னும் படிப்பை முடிக்காத மருத்துவர்களும் உடனடியாகப் பணிக்குத் திரும்பு மாறு உத்தரவிடப்பட்டுள்ளனர்.

சென்னையில் படித்து வரும் ஒரு முதுகலை மருத்துவப் பட்டதாரி மருத்துவர் ஒருவர் எங்கள் செய்முறைத் தேர்வு செப்டம்பர் 28 அன்று தொடங்கி, இன்னும் நடந்துகொண்டிருக்கிறது. இதற்கிடையில், உடனடியாக நியமிக்கப்பட்ட நிறுவனத்திற்குத் திரும்பு மாறு மருத்துவப் பட்டப்படிப்புத் துறை (DME) எங்களுக்கு உத்தரவு பிறப்பித்துள்ளது. மருத்துவர்கள் செய்முறைத் தேர்வுகளுக்குத் தயாராகிக்கொண்டிருக்கும்போது இது சாத்தியமில்லை. இது ஒரு தற்காலிகப் பணி நியமனம் என்பதால், நிரந்தரப் பணி நியமனம் எப்போது வழங்கப்படும் என்று எங்களுக்குத் தெரியாது. ஒரு தற்காலிகப் பணி நியமனத்திற்காக எங்களால் தற்போதைய இடத்திலிருந்து முழுமையாக இடம்பெயர முடியாது. இது எங்களுக்குத் தேவையற்ற சிரமத்தை ஏற்படுத்துகிறது," என்று கூறினார்.

பணியில் இருக்கும் மற்றொரு முதுகலை மருத்துவர், பல மருத்துவர்கள் உடனடியாகப் பணியில் சேருவதற்காக மற்ற மாவட்டங்களுக்குப் பயணிக்க வேண்டியுள்ளது என்று கூறினார். பல கல்லூரிகளும் முதுகலை மருத்துவர்களைப் பணியிலிருந்து விடுவிக்கத் தொடங்கியுள்ளன.

மேலும், இந்த முறை பணி நியமனங்கள் பணி மூப்பின் அடிப்படையில் வழங்கப்படவில்லை என்றும் மருத்துவர்கள் குற்றம் சாட்டினர்.

அரசு மருத்துவக் கல்லூரிகளின் முதல்வர்களுக்கு செப்டம்பர் 5 ஆம் தேதி எழுதிய கடிதத்தில், மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநரான டாக்டர் வி. லோகநாயகி, தங்களது முதுகலைப் படிப்பை முடித்து, பணியமர்த்தப்பட்ட நிறுவனங்களுக்குத் திரும்புவதற்காக, முதுகலைப் பட்டப் படிப்பு சேவை மருத்துவர்களை உடனடியாகப் பணியிலிருந்து விடுவிக்குமாறு அறிவுறுத்தினார்.

மேலும், பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட முதுகலை மருத்துவர்கள், தங்கள் படிப்பை முடித்த மறுநாளிலிருந்து, தங்களுக்கு மீண்டும் ஒதுக்கப்பட்ட பதவிகளில் சேரும் வரை புதிய நிறுவனத்தில் சம்பளம் பெற்றுக்கொள்ள ஏதுவாக, அவர்களுக்குப் பணம் பெறாததற்கான சான்றிதழ்களை வழங்குமாறு துறைத் தலைவர்களிடம் அவர் கேட்டுக் கொண்டார். படிப்பை முடிக்காத முதுகலை மருத்துவர்கள், படிப்பை முடிக்கும் நாளன்றே பணியிலிருந்து விடுவிக்கப்பட வேண்டும் என்றும் அவர் கூறினார். மேலும், மருத்துவர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட பதவிகளில் உடனடியாகப் பணியில் சேருமாறும் மருத்துவக் கல்வித்துறைத் தலைவர் அறிவுறுத்தினார்.

முந்தைய தொகுதி மாணவர்கள் சந்தித்த சம்பளத் தாமதங்களையே இந்தத் தற்காலிக ஏற்பாட்டிற்கான காரணமாக மருத்துவப் பள்ளித் துறை (DME) குறிப்பிட்டதாகப் பணிபுரிகின்ற முதுகலை மருத்துவர்கள் தெரிவித்தனர். "வழக்கமாக, படிப்பை முடித்த பிறகு, பணிபுரிகின்ற முதுகலை மருத்துவர்களுக்குப் பணி நியமனம் கிடைக்கும் வரை அவர்களின் சம்பளம் நிறுத்தப்படும். பணி நியமனம் கிடைத்த பிறகு, செயல்முறை முடிந்ததும் நிலுவையில் உள்ள சம்பளத்தைப் பெறுவோம். இது ஒரு வழக்கமான நடைமுறை என்பதால், அந்த சம்பள இடைவெளி எங்களுக்குப் பரவாயில்லை," என்று மற்றொரு முதுகலை மருத்துவர் கூறினார்.

ஆண்டியும் போண்டியும்



ஆண்டி : ஏன்யா; தமிழ்நாட்டில் நடைபெறும் தொடர் கொலைகளுக்கு த.வெ.க. அரசு பொறுப்பேற்க முடியாதுன்னு 'மகா சப்த' கட்சித் தலைவர் ஒருத்தர் சொல்லி இருக்காரே தெரியுமா!

போண்டி : ஆமாய்யா, திருவண்ணாமலையிலே அப்படித்தான் பேட்டி கொடுத்திருக்கார். என்ன செய்வது, வந்திறங்கிய 'ஷோபா' ரொம்ப வெயிட்டாச்சே - அவராச்சும் பரவாயில்லை. அவர் மகன் பேட்டி தரப் போறார் பார். முதல மைச்சர் விஜய் ஆட்சியிலே கொலை - கொள்ளைகள் அவ்வளவா நடக்கறதில்லைன்னு.

சந்தி சிரிக்கும் சட்டம் – ஓழுங்கு!

செயலற்ற விஜய் ஆட்சியில் கொலை, கொள்ளைகள்!

(07.10.2026)



1. கரூர் மாவட்டம் லாலாபேட்டை அருகே ஒரு கிராம் தங்க நகைக்காக வாழைத் தோட்டத்தில் மூதாட்டி கழுத்தை அறுத்துக் கொலை .....

2. திருவண்ணாமலை மாவட்டம் பிடாரம் கோட்டையில் குடிபோதையில் ஏற்பட்ட தகராறில் முதியவர் உலக்கையால் அடித்துக் கொலை ...

3. திருச்சி மாவட்டம் கீழூர் மயானம் அருகே எரிக்கப்பட்ட நிலையில் கிடந்த பெண் சடலம். மண்டை ஓடு இல்லாததால் போலீசார் அதிர்ச்சி ..

4. திருநெல்வேலி மாவட்டம் வள்ளியூரில் அரசு பஸ் கண்டக்டர் அடித்துக் கொலை. 5 பேர் சிக்கினர்...



5. திருப்பத்தூர் மாவட்டம் தகர குப்பம் அருகே வீட்டில் தனியாக தூங்கிக் கொண்டிருந்த 19 வயது இளம் பெண்ணிடம் பாலியல் சீண்டலில் ஈடுபட்டதொழிலாளி சிக்கினார்...

6. கோவை பீளமேட்டில் கணவனை இழந்த பெண்ணை கட்டிப்போட்டு பலாத்காரம் செய்த தொழிலதிபர்....



7. ஈரோடு மாவட்டம் கோபி அருகே தன்னிடம் வேலை செய்யும் பெண்ணிடம் பலாத்காரம் செய்த த.வெ.க. பிரமுகருக்கு. காவல் நிலையத்தில் உபசரிப்பு ...

8. நாகப்பட்டினம் மாவட்டம் நாகூர் அருகே தனியார் பள்ளியில் +2 படித்த மாணவியிடம் பாலியல் அத்துமீறலில் ஈடுபட்ட வாலிபர் சிக்கினார் ...

9. திண்டுக்கல் மாவட்டம் பழனி அருகே மானூர் ஊராட்சியில் ஒன்றிய தொடக்கப் பள்ளியில் உள்ள குடிநீர் தொட்டியில் மனித கழிவு கலப்பு. ஊர் மக்கள் அதிர்ச்சி...

10. விருதுநகர் மாவட்டம் ராஜபாளையம் அருகே வெளியூர் சென்றிருந்த பூ வியாபாரி வீட்டில் பீரோவை உடைத்து ஆறு பவன் நகை மற்றும் ரூபாய் ஐம்பதாயிரம் திருடிய பெண் போலீஸ் ஏட்டு சிக்கினார் ....



11. சென்னை துரைப்பாக்கம் காவல் நிலையத்தில் பறிமுதல் செய்து நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 13 பைக்குகளை திருடிய போலீஸ்காரர் உட்பட மூன்று பேர் சிக்கினர் ...

12. தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோவிலில் த.வெ.க. நிர்வாகி ரீல்ஸ் . கோயில் நிர்வாகம் போலீசில் புகார் ...

13. சென்னை மற்றும் புறநகர் பகுதியில் தொடரும் பல மணி நேரம் மின் வெட்டு. பொதுமக்கள் அவதி. சாலை மறியல்கள் ....

தஞ்சை இரயில் நிலையத்தில் இந்தி திணிப்பைக் கண்டித்து

தஞ்சை மத்திய மாவட்ட தி.மு.க. வினர் ஆர்ப்பாட்டம்!

துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ., ச.முரசொலி எம்.பி. தலையீட்டால் பெயர்ப் பலகை அகற்றம்!

தஞ்சாவூர், அக்.10- தஞ்சாவூர் ரயில் நிலையம் அம்ரீத் பாரத் திட்டத்தின் கீழ் ரூ.27.17 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு தஞ்சை ரயில் நிலையத்தில் மேம்பாட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. தமிழகத்தின் மிகவும் பழமை வாய்ந்த ரயில் நிலையங்களில் தஞ்சை ரயில் நிலையமும் ஒன்றாகும். தென்னக ரயில்வேயின் திருச்சி கோட்டத்திற்கு உட்பட்டது.

தற்போது தஞ்சை வழியாக சென்னை, ராமேஸ்வரம், திருப்பதி, வாரணாசி, பெங்களூரு, புதுச்சேரி, திருச்செந்தூர், கன்னியாகுமரி, திருநெல்வேலி, கோவை, செங்கோட்டை போன்ற இடங்களுக்கு எக்ஸ்பிரஸ் ரயில்களும், தஞ்சையில் இருந்தும், தஞ்சை வழியாகவும் மயிலாடுதுறை, திருச்சி, நாகை, நாகூர், காரைக்கால், வேளாங்கண்ணி போன்ற இடங்களுக்கு எக்ஸ்பிரஸ் ரயில்களும் இயக்கப்பட்டு வருகின்றன. தஞ்சை ரயில் நிலையத்தில் 5 நடைமேடைகளும், 7 ரயில்வே பாதைகளும் உள்ளன. நாள்தோறும் ஏராளமான எக்ஸ்பிரஸ் ரயில்கள் இயக்கப்படுவதால் தஞ்சை ரயில் நிலையம் எப்போதும் பரபரப்புடன் காணப்படும்.

நாட்டின் பெரிய, சிறிய நகரங்களில் உள்ள ரயில் நிலையங்களை மறுசீரமைப்பு செய்ய ரயில்வே அமைச்சகம் நடவடிக்கை எடுத்துள்ளது. அம்ரீத் பாரத் ரயில் நிலைய திட்டத்தின் கீழ் தெற்கு ரயில்வேயில் 90 ரயில் நிலையங்களை மேம்படுத்தத் திட்டமிடப்படடுள்ளது.

இந்த திட்டத்தின் கீழ் பயணிகள் காத்திருப்போர் அறைகள் மேம்படுத்தப்படும். ரயில் நிலையத்தில் சிற்றுண்டிக் கடைகள் அல்லது சிறிய கடைகள் அமைக்கப்படும். ஒரு ரயில் நிலையத்தில் ஒரு நிலையம் ஒரு தயாரிப்பு திட்டத்தின் கீழ் குறைந்தபட்சம் 2 கடைகள் திறக்கப்படும். ரயில் நிலையத்தின் முக்கிய இடங்களில் ரயில் வருகை, புறப்பாடு உள்ளிட்ட விவரங்களை காட்சிப்படுத்தும் பலகைகள் பொருத்தப்படும். மேலும் பயணிகளை கவரும் வகையில் இயற்கை காட்சிகள், செடிகள், மரக்கன்றுகள் உருவாக்கப்படும். அனைத்துப் பகுதிகளிலும் 600 மீட்டர் நீளம் கொண்ட உயர்நிலை நடைபாலம் அமைக்கப்பட்டு வருகிறது. தஞ்சை ரயில் நிலையத்தில் 2 நுழைவாயில்கள் உள்ளது. அதில் ஒரு நுழைவாயிலில் முகப்பு தோற்றம் வடமாநிலத்தில் உள்ள கோவில்கள் போல் அமைக்கப்பட்டுள்ளது. மற்றொரு நுழைவாயில் பல்வேறு போராட்டங்களுக்குப் பின்பு தஞ்சை பெரிய கோவில் போல் வடிவமைக்கப்பட்டுள்ளது.

அதன் கீழே ஹிந்தி எழுத்துப் பலகை மிகப்பெரிய அளவில் வைக்கப்பட்டது. இதற்கு தி.மு.க, உள்ளிட்ட பல்வேறு கட்சி, இயக்கம், அமைப்புகள் எதிர்ப்பு தெரிவித்தனர்.

ஹிந்தி பெயர் பலகை அகற்றக்கோரி நேற்று காலை தஞ்சாவூர் மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் ஆர்ப்பாட்டம் நடத்த முடிவு செய்யப்பட்டது. இதற்காக மத்திய மாவட்ட தி.மு.க செயலாளர் துரை சந்திரசேகரன் எம்.எல்.ஏ தலைமையில் முரசொலி எம்.பி., முன்னாள் எம்.எல்.ஏ.க்கள் டி.கே.ஜி. நீலமேகம், ராமச்சந்திரன், மகேஷ் கிருஷ்ணசாமி , தலைமை செயற்குழு உறுப்பினர் செல்வம்,மாநகர செயலாளர் சண். ராமநாதன், மேயர் அஞ்சுகம் பூபதி உள்ளிட்ட ஏராளமான திமுக நிர்வாகிகள் ரயில் நிலையம் முன்பாக திரண்டனர். இந்நிலையில் ரயில்வே துறை அதிகாரிகள் ஹிந்தி பெயர் பலகையை அகற்றி அங்கு தமிழ் பெயர் பலகையை பொருத்தும் நடவடிக்கையில் இறங்கினர். இதன் காரணமாக தி.மு.க.வினரின் ஆர்ப்பாட்டம் ரத்து செய்யப்பட்டது.

இது குறித்து மத்திய மாவட்டச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ. அளித்த பேட்டியில் கூறியதாவது:

த.வெ.க அரசு பொறுப்பேற்ற பிறகு ஹிந்தி மொழிக்கு முன்னுரிமை அளிக்கும் போக்கு அதிகரித்துள்ளது. தஞ்சாவூர் ரயில் நிலையத்தில் பெரிய அளவில் ஹிந்தி மொழி பெயர்ப் பலகை வைக்கப்பட்டதைக் கண்டித்து தி.மு.க. சார்பில் ஆர்ப்பாட்டம் நடத்த இருந்த நிலையில் பெயர் பலகை அகற்றப்பட்டது. தமிழ் மொழியை பின்னுக்கு தள்ளிவிட்டு ஹிந்தி மொழிக்கு முக்கியத்துவம் கொடுக்கும் நிலை நீடித்தால் போராட்டத்தை தீவிரப்படுத்துவோம். உடனடியாக தஞ்சாவூர் சந்திப்பு என்பதைக் குறிக்கும் விதமாக தமிழ் மொழியில் பெரிய அளவில் பெயர் பலகை வைக்க வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.



நாகை மாவட்டம் நாகை நகரக் கழக முன்னாள் செயலாளர் ஆர்.ஏ.வீராசாமி 6ம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு அவரது திருஉருவப் படத்திற்கு நாகை மாவட்டக் கழகச் செயலாளர், என்.கௌதமன் தலைமையில் கழகத்தினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். உடன் மாவட்டக் கழக பொருளாளர் மு.லோகநாதன், நாகை நகர கழக செயலாளர் இரா.மாரிமுத்து, மாவட்ட சார்பு அணி நிர்வாகிகள் இரா. முருகையன், ஆர்.ஏ.டி.அண்ணாதுரை, எஸ்.பால்ராஜ், ஆர்.ஆர். குலோத்துங்கன், இரா.தங்கதுரை, விமல்மொக்கை, அய்யாவு கணேசன், எஸ்.எம்.ஏ.கணேசன், நிஜாம் நாகை நகர நிர்வாகிகள் ஆர்.ரமணி, பி. திலகர், வெற்றிலைகடை எஸ்.சிவா, அபுபக்கர், மற்றும் நிர்வாகிகள் வழக்கறிஞர் செல்வராஜ், முகுந்தன், ஆர்.எஸ்.சத்தியன், மு.க. சோமு, 'மு.க.ஜீவா, பாபு, பரமு, முத்து உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

விளநகர் எஸ். கணேசன்

அக்டோபர் 10 (1987)



மாணவர் பருவத்திலிருந்து திராவிடர் கழகத்தில் ஈடுபாடு கொண்டு, பின்னர் கழகம் துவக்கப்பட்ட காலத்திலிருந்து பணியாற்றியவர்.

அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோரின் அன்புக்கு உரியவராக விளங்கியவர்.

தமிழக சட்டப்பேரவை உறுப்பினராக தொடர்ந்து மூன்று முறை தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்பாக தொகுதி மக்களுக்கு பணியாற்றியவர்.

செம்பனார்கோயில் ஒன்றிய பெருந்தலைவராகவும் – கழகத்தின் தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்தவர்.

விலைவாசி உயர்வு இந்தி எதிர்ப்பு உள்ளிட்ட அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.